## டிஜிட்டல் பொருளாதார அமைச்சு

# ஒரு செழிப்பான டிஜிட்டல் பொருளாதாரத்தில் நுழையத் தயாரா?

இலங்கையில் தொழில்நுட்ப மாற்றம், மூலோபாய இரண்டாம் நிலை முயற்சிகள் மூலம் புதுமை, மேம்பாடு மற்றும் அபிவிருத்தியை முன்னெடுப்பதில் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு (MoDE) முன்னணியில் உள்ளது. இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை செயற்படுத்துவதற்கான விரிவான கட்டமைப்பை வழங்க டிஜிட்டல் பொருளாதாரத் திட்டம் நிறுவப்பட்டுள்ளது. டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தை திறம்பட செயற்படுத்துவதை வலுப்படுத்த, டிஜிட்டல் பொருளாதார அமைச்சு (MoDE) அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒரு திட்ட முகாமைத்துவப் பிரிவை (PMU) நிறுவியுள்ளது. டிஜிட்டல் அரசாங்கம், டிஜிட்டல் தொழில்கள், டிஜிட்டல் பொருளாதாரம், மூலோபாய தொழில்கள் மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளை ஆதரிக்க குறுகிய கால வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களுக்கு டிஜிட்டல் பொருளாதார அமைச்சு மிகவும் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களைத் தேடுகிறது.

**இந்த வாய்ப்பு உங்களுக்கு ஏன்?**

- இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை செயற்படுத்த ஒரு புதுமையான முயற்சியில் பங்கேற்க.
- டிஜிட்டல் துறையில் சிறந்த நிபுணர்களுடன் ஒத்துழைக்க.
- நாட்டின் தொழில்நுட்ப நிலப்பரப்பின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்க.

**நாங்கள் யாரைத் தேடுகின்றோம்?**

1. மென்பொருள் கட்டிடக்கலைஞர் - 04 வெற்றிடங்கள்
2. தொழில்நுட்ப தலைமை - 04 வெற்றிடங்கள்
3. சிரேஷ்ட தொழில்நுட்ப பொறியியலாளர் - 05 வெற்றிடங்கள்

**வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தின் விதிகள்**

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு 2 மாத காலத்திற்கான குறுகிய கால வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தை வழங்குகின்றது. விண்ணப்பதாரர்கள் 65 வயதிற்குட்பட்ட இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும். தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**ஆட்சேர்க்கும் முறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் திறமை அடிப்படையில்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**

ஒவ்வொரு பதவிகளுக்குமான மேலதிக தகவல்களுக்கு டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் https://mode.gov.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் சுய தரவுகளுடன் உறவினரல்லாத இரு சான்றுபகர்வோரின் தொடர்பு விபரங்கள் சகிதம் செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு <admin@pmu.mode.gov.lk> அல்லது தபால் மூலம் செயலாளர், செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு, டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, நிலை 11, யுனிட் இல. 1101, வன் கோல்பேஸ் கோபுரம், இல. 1A, மத்திய வீதி, கொழும்பு 02 எனும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். சமர்ப்பிப்புகள் 2025 ஜுலை 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை மின்னஞ்சலின் Subject line இல் மற்றும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தயவு செய்து தெளிவாகக் குறிப்பிடவும். முழுமையற்ற மற்றும் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.


**செயலாளர், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு,**
**நிலை 11, யுனிட் இல. 1101, வன் கோல்பேஸ் கோபுரம்,**
**இல. 1A, மத்திய வீதி, கொழும்பு 02.**
**தொலைபேசி: +94 112 334575, தொலைநகல்: +94 112 334576,**
**இணையதளம்: https://mode.gov.lk**


2025 ஜுலை 25.